# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (22.06.2024 முதல் 26.06.2024)

**அறிக்கை எண் 050/2024** **தேதி.21.06.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 19°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை

ஈரோடு மாவட்டத்தின் 18.06.24 முதல் 20.06.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 24°C to 25°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 61 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 17-19 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (18.06.2024 முதல் 20.06.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 26.06.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18/06 | 19/06 | 20/06 | தேதி | நாள்-1 22/06 | நாள்-2 23/06 | நாள்-3 24/06 | நாள்-4 25/06 | நாள்-5 26/06 |
| 0.3 | 3.4 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 9 | 13 | 3 | 4 |
| 35 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 36 | 35 | 35 | 34 |
| 25 | 24 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 23 | 23 | 22 |
| 6 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 8 | 6 | 5 |
| 70 | 83 | 76 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 80 | 80 |
| 61 | 74 | 76 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 70 | 50 | 60 | 50 |
| 17 | 18 | 19 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 10 | 14 | 12 | 16 |
| 250 | 230 | 230 | காற்று வீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (22.06.2024 முதல் 26.06.2024)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 23.06.24, 24.06.24, 25.06.24 மற்றும் 26.06.24 ஆகிய நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10-16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **22-06-2024** | 1.0 | 2.0 | 0.0 | 8.0 | 7.0 | 0.0 | 6.0 | 2.0 | 0.0 | 12.0 | 3.0 | 8.0 | 0.0 | 7.0 |
| **23-06-2024** | 9.0 | 11.0 | 7.0 | 26.0 | 13.0 | 6.0 | 15.0 | 7.0 | 7.0 | 20.0 | 10.0 | 21.0 | 16.0 | 18.0 |
| **24-06-2024** | 14.0 | 15.0 | 12.0 | 29.0 | 17.0 | 11.0 | 19.0 | 13.0 | 12.0 | 23.0 | 15.0 | 24.0 | 15.0 | 21.0 |
| **25-06-2024** | 2.0 | 3.0 | 1.0 | 11.0 | 2.0 | 1.0 | 4.0 | 2.0 | 1.0 | 5.0 | 2.0 | 8.0 | 3.0 | 6.0 |
| **26-06-2024** | 4.0 | 5.0 | 2.0 | 20.0 | 5.0 | 2.0 | 7.0 | 3.0 | 2.0 | 10.0 | 4.0 | 14.0 | 7.0 | 10.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | இலேசானது முதல் மிதமான மழை அதிக காற்றுடன் எதிர்பார்க்கப்படுவதால் நீர் பாய்ச்சுவதை தள்ளிப்போடலாம்.<br>காற்றின் வேகமானது மணிக்கு 10 - 26 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. |
| நெல் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் வானிலை நெல் நாற்றங்காலில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் நிலவ ஏதுவாக உள்ளது. இதனை கண்காணித்து தேவைப்பட்டால் 5 சத வேப்பங்கொட்டைசாற்று கரைசலைத் தெளிக்கவும். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும். |
| தக்காளி | நடவு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி தக்காளி நடவு செய்ய இதுவே தகுந்த தருணம். (மழை இல்லாத சமயங்களில்) |
| வாழை | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் மணிக்கு 12 -24 கிமீ வரை வேக காற்றினை கருத்தில் கொண்டு 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | தென்மேற்கு பருவமழை துவங்கி இருப்பதால் மரம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் தக்க ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும். மேலும் தென்னைக்கு உரமிட மரத்தைச்சுற்றி 1.8 மீட்டர் தள்ளி அரைவட்ட வடிவில் குழி எடுக்கவும். |
| கால்நடைகள் | | கடந்த மழையில் முளைத்த புதிய புற்களை மேயவிடுவதை தவிர்ப்பதனால் கால்நடைகளில் குடற்புழுக்களின் தாக்கத்தினை தவிர்க்கலாம்.<br>வேகமான காற்றினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சினைப்போக்க கால்நடைகளுக்கு போதிய குளிர்ந்த நீர் அளிக்கவும். |

## குறுஞ்செய்தி

- மிதமான மழையுடன் காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் குலை தள்ளிய வாழை மற்றும் 5 மாதம் வயதுடைய கரும்புக்கு முட்டுக் கொடுக்கவும்.


முதன்மைஅலுவலர் (GKMS)

வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்

த.நா.வே.ப.கழகம், கோவை